13.02.2026

அ.வ.எண். 179/2022

வா.சா.1 – திருமதி.பிரியங்கா, த/பெ. ஸ்டீபன் பாபுராஜ், க/பெ. பிரிண்டோ

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 13.02.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் MBA, HR படித்துள்ளேன். நான் Emerald Jewel Industry-இல் HR ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது தந்தை 2ம் வாதி, ஸ்டீபன் பாபுராஜிற்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்கு எழுத படிக்க தெரியும். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் சாட்சியத்தை நான் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரய பத்திரம், 23.12.2002 தேதியிட்ட பொது அதிகார பத்திரம், வா.சா.ஆ.5 பாகசாசன ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து குறித்த ஆவணங்கள் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்.

2. எனக்கு 35 வயது ஆகிறது. என் தாயார் லிஸ்ஸி தாவா சொத்தை கிரயம் பெறும்போது எனக்கு 12 – 13 வயது இருக்கும் என்றால் சரிதான். அப்போது நான் பள்ளியில் 8 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். எனவே அந்த சமயத்தில் என் தாயார் தாவா சொத்தை அளந்து கிரயம் பெற்றாரா என்று தெரியாது என்றால் அப்போது தெரியாது, பின்னிட்டு தெரியும். பின்னிட்டு என் தாயார் சொத்தை அளந்து வாங்கினார் என எப்போது தெரியவந்தது என்றால் என் தாயார் சொன்னார். சொத்தை அளந்ததற்கான ஆவணம் கொடுத்தாரா என்றால் ஆவணத்தை காட்டினார். தாவா சொத்தை அளந்ததற்கான ஆவணத்தை என் தாயாரோ, நானோ தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது.

3. நான், பின்னிட்டு தாவா சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. ஆவணம் இருந்ததால் அளந்து பார்க்கவில்லை. அவ்வாறு அளந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் மறுக்கிறேன். தாவா சொத்து க.ச.எண்.612/1 காலையில் உள்ளது. வா.சா.ஆ.3 சிட்டாவில், தாவா சொத்து புல

எண்.612/1A என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்து க.ச.எண்.612/1B ல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தாவா சொத்தை அளந்ததாக சொல்லும் விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றும் என் தாயார் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

4. வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில், க.ச.எண்.612/1 நெ.காலையில், மொத்தம் ஏக்கர் 3.52 சென்ட் இருந்தது என்றால் சரிதான். பொது அதிகாரம் ஆவணம் மூலமாக எஸ்.ஜெயபிரகாஷ் என்பவர் என் தாயாருக்கு பவர் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணம் எஸ்.ஜெயபிரகாஷ் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் என்றால் சரிதான். **23.12.2002 தேதியிட்ட ஜெயபிரகாஷ் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் நகல் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.3 சிட்டாவில் என் தாயார் மற்றும் இன்னும் நிறைய நபர்கள் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

5. என் அம்மா பெயரில் மட்டும் தாவா சொத்து குறித்து சிட்டா ஏற்படவில்லை என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.612/1B சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 0.88 சென்ட் குறித்து அவரது பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரமானது, 1. நாராயணசாமி கவுண்டர், 2. முருகய்ய கவுண்டர், 3. பழனாத்தாள், 4.ராமசாமி ஆகியோருக்கு இடையே ஏற்பட்டது என்றால் சரிதான். அதில், ஏக்கர் 0.88 சென்ட் ராமசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6. C-அட்டவணை சொத்தாக ஏக்கர் 0.88 செண்ட்டானது பழனாத்தாள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ராமசாமி அவருக்கு பிரிந்த ஏக்கர் 0.88 சென்ட் குறித்து அன்றைய தினமே 18.03.1992 தேதியில் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

ஆவணத்தை பார்க்க வேண்டும். 18.03.1992 தேதியில், ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட டி-அட்டவணை சொத்தை பிரதிவாதியின் தகப்பனார் என்.பழனிச்சாமி 18.03.1992 தேதியில் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு அங்கமுத்து என்பவர் 21.09.1992 தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணப்படி பழனாத்தாளின் சி-அட்டவணை சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அங்கமுத்து இறந்த பின்னிட்டு, அவரது வாரிசுகளின் பவர் ஏஜெண்டான ஜெயபிரகாஷ் என்பவர் மூலமாக என் தாயார் தாவா சொத்தை வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

7. பிரதிவாதியின் தகப்பனார் பழனிச்சாமி ஏக்கர் 0.88 சென்ட் விஸ்தீரணத்தை கிரயம் பெற்று அதில் உடனடியாக வேலி அமைத்து அனுபவம் செய்து வந்தார் என்றால் தெரியாது. பழனிச்சாமி இறந்த பின்னிட்டு, பிரதிவாதி மேற்படி சொத்தை தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் தெரியாது. தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் ஒருபோதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டிடம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் வேலி அமைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2002 ம் ஆண்டு சொத்தை கிரயம் பெற்றுள்ள நிலையில் இன்றுவரை ஏன் கட்டிடம் கட்டவில்லை என்றால் பணம் இல்லை.

8. வங்கியில் இருந்து பணம் பெற்று சொத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்தோமா என்றால் இல்லை. என்னுடைய தாயார் சொத்தை வாங்குவதற்கு முன்பாக வழக்கறிஞர் கருத்துரை பெற்று சொத்தை வாங்கினாரா என்றால் தெரியாது. தாவா சொத்து அமைந்துள்ள இருகூர் கிராம Layout plan தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு Layout plan தாக்கல் செய்யவில்லை என்றால் மறுக்கிறேன். வழக்கின் விவரம் மற்றும் நான் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

9. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் ஏக்கர் 0.88 சென்ட் விஸ்தீரணம் உள்ள பூமி மற்றும் இதர பூமிகள் லே-அவுட்டாக பிரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 0.88 சென்ட் என

குறிப்பிடப்பட்டுள்ளது அங்கமுத்துவின் சொத்து என்றால் சரிதான். இதர சொத்துக்கள் என்ன என்ற விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இருகூர் கிராம லே-அவுட்டிற்கும், பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் தெரியாது. பொதுவாக ஒருவரின் சொத்தை அவரின் அனுமதியின்றி 3 ம் நபர் லே-அவுட்டாக பிரித்து விற்பனை செய்ய முடியாது என்றால் சரிதான். அங்கமுத்துவின் ஏக்கர் 0.88 சென்ட் பூமிக்கும், க.ச.எண்.612/1B ல் உள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 0.88 சென்ட் பூமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் தெரியாது.

10. அங்கமுத்துவிற்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 0.88 சென்ட்டை விட அதிகமாக பூமியை அங்கமுத்துவின் வாரிசுகள் லே-அவுட்டாக பிரித்துள்ளனர் என்றும், அந்த லே-அவுட் பிளானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி உண்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 சிட்டாவின் படியே, தாவா சொத்தானது க.ச.எண்.612/1A காலையில் தான் அமைந்துள்ளது என்றும், எனவே, உண்மையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றால், நான் அந்த காலையில் தான் அளந்து அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்றால் மறுக்கிறேன்.

11. அங்கமுத்துவிற்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 0.88 சென்ட்டை விட அதிகமாக பூமியை அங்கமுத்துவின் வாரிசுகள் லே-அவுட்டாக பிரித்துள்ளனர் என்றும், இது குறித்து அறியாமல் ஆவணங்களை சரிபார்க்காமல், தாவா சொத்தை அளந்து அடையாளம் காணாமல் கிரயம் பெற்றது என் தாயாரின் தவறு என்றும், தற்போது என்னால் தாவா சொத்து எங்குள்ளது என்பதை கண்டறிய இயலாததால் பிரதிவாதிக்கு எதிராக லே-அவுட்டிற்கு எந்த விதத்திலும் சம்மந்தமில்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்றால் மறுக்கிறேன். பிரதிவாதியிடம் இருந்து சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் அடைய வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12. உண்மையில் அடிநிலத்தில் உரிமை இல்லாததால் தான் தாவா சொத்தில் கட்டிடம் எதுவும் கட்டவில்லை என்றால் தவறு. நான் சொல்லும் லே-அவுட் நடைமுறைக்கு வரவில்லை என்றும் , தற்போதும் மேற்படி இடம் காடாக

உள்ளது என்றும், அதில் சொத்து குறித்து அளந்து அத்துக்கல் எதுவும் நடவில்லை என்றால் தவறு. உண்மை நிலை தெரிய நீதிமன்ற ஆணையரை நியமித்தால் மேற்படி விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் தற்போது வரை நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தவறு. நான் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் நீதிமன்ற ஆணையர் அங்கு வந்து அளந்து பார்த்தால் தாவா சொத்து அங்கு இல்லை என்ற உண்மை தெரியவரும் என்பதால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தவறு.

13. 16.08.2022 தேதியில் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார் என்றும், அதை தடுத்து அது தொடர்பாக காவல்நிலையத்தில் என் தாயார் புகார் கொடுத்ததாக சொல்லியுள் ளநிலையில் அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது தவறு. பிரதிவாதிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.612/1B ல் உள்ள அவருடைய ஏக்கர் 0.88 சென்ட் குறித்து மட்டும் உரிமை கோருகிறார் என்றும், அவர் வேறு சொத்து குறித்து உரிமை கோரவில்லை என்றால் அது தவறு. என் தாயாரின் வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் நான்கு எல்லையில், பிரதிவாதியின் சொத்து காட்டப்படவில்லை என்றால் தெரியாது.

14. வா.சா.ஆ.2 ஆவணப்படி, பிரதிவாதி தாவா சொத்திற்குஅருகில் இல்லை என்றும், எனவே, தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தார் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரங்களை வேண்டுமென்றே மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. அரசு சர்வேயரை என் தாயார் சொத்தை அளக்க சொன்னபோது சர்வேயரும் அளந்து பார்த்தார் என்றும், அளந்து பார்த்துவிட்டு சொத்தை இனம் காணவில்லை என்றும், இந்த சொத்து பிரதிவாதியின் சொத்திற்கு எவ்விதத்திலும் சம்மந்தமில்லை என்றும், அது பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அது வேறு உட்பிரிவு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார் என்றால் தவறு. அதனால் சர்வேயர் அளந்ததாக சொல்லும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு.

15. என்னுடைய வழக்குரையில் தாவா சொத்தானது பிரதிவாதியின் சொத்தை ஒட்டி மேல்புறமாக உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கும், வழக்கு பரிகாரத்திற்கும், பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், பிரதிவாதி எங்களுடைய சொத்தை ஆக்கிரமிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் தவறு. பொய்யான விவரங்களின் அடிப்படையில், பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழகககு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur